(இ) ஆமெனில், அதன் சிபாரிசுகளின் நகல் ஒன்று சபைமுன் வைக்கப்படுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) ஆம்.

(இ) உறுப்பினர்களின் தகவலுக்காக, அறிக்கையின் நகல் ஒன்று சட்டப் பேரவை நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

நஞ்சை நிலங்களில் சினிமாக் கீத்துக் கொட்டகைகள்

* 57 கேள்வி.—திரு. சி. கோதண்டராம பாகவதர் : கனம் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :

(அ) வடார்க்காடு ஜில்லாவில் 1965-66-ல் எத்தனை இடங்களில், நஞ்சை நிலங்களில் சினிமாக் கீத்து கொட்டகைகளுக்கு லைசன்ஸ் வழங்கப்பட்டது ?

(இ) நஞ்சை நிலங்களில் சினிமாக் கீத்து கொட்டகைகள் கட்டுவது உணவு உற்பத்தியை பாதிக்கும் என்பது அரசாங்கம் அறியுமா ?

(உ) நஞ்சை நிலங்களில் சினிமாக் கீத்து கொட்டகைகள் கட்டுவதற்கு அரசாங்கம் தடைவிதிக்கும் உத்தேசமுண்டா ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (*a*) Seven cases.

(*b*) Yes.

(*c*) No.

Additional Sub-Magistrate for Tiruchirappalli

* 58 *Q*.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state whether the Government have proposed to appoint an additional Sub-Magistrate No. IV for Tiruchirappalli to relieve the congestion in the existing Sub-Magistrate Courts there ?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : No Sir.

திரு. வை. சங்கரன் : இம்மாதிரி அங்கே ஏராளமாக வழக்குகள் குவிந்து விட்டன. ஆகவே, அங்கே இன்னொரு சப்-மாஜிஸ்ட்ரேட் வேண்டும் என்று பார் அசோசியேஷனிலிருந்தும், மற்றவர்களிடமிருந்தும் முறையீடுகள் வந்திருக்கின்றனவா ? அவற்றின் பேரில் எடுத்த முடிவு என்ன ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : சார், திரு. பி. என். சுப்பிரமணியம் என்கிற ஒரு லோகல் அட்வகேட் எழுதியனுப்பியிருக்கிறார்கள். அதை ஹைக்கோர்ட்டுக்கு ட்ரான்ஸ்பர் செய்து இருக்கிறோம். அவர்கள் பதில் எதிர்பார்க்கப் படுகிறது.